## போபே போத்தல பிரதேச சபை

## காலி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூலை 07 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான போபே போத்தல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஊழியர்கள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 3,363,994 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 3,281,033 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோர் ரூபா 82,961 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து சம்பள மீளளிப்புத் தொகையாக கிடைத்திருந்த ரூபா 12,463,545 தொகை அனைத்து நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் பல் வகைப்படுத்தப்படாமல் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் முதல் 06 மாதங்களுக்காக காலி பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 9,194,576 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,000,000 தொகை என குறிப்பிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 3,194,576 குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(ஈ) சபைக்குச் சொந்தமான ரூபா 50,000 இற்கான இரண்டு காணிகள், பெறுமதியினை கணக்கிட முடியாத இரண்டு காணிகள் மற்றும் ரூபா 75,000 இற்கான 02 கைடிரக்டர் வண்டிகளின் பெறுமதி என்பன நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் கணக்கின் மீதி ரூபா 54,175,566 தொகை எனினும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 541,112,790 ஆக இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரி உண்டியல் முதலீடுகளின் பெறுமதி ரூபா 1,304,605 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 1,333,552 தொகை என காட்டப்பட்டுள்ளமையால் திறைசேரி உண்டியல்களில் முதலீடுகளின் மீதி ரூபா 28,947 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுபாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 2,601,256 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 23,043,830 இற்கான வீதவரி மீதியிலுள்ள பிழையற்ற தன்மையினை வீதவரி பதிவேடு சமப்படுத்தாமையால் பரிசோதனை மேற்கொள்ள முடியவில்லை.

1.3.5 தொங்கல் கணக்குகள்

------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 559,464 இற்கான தொங்கல் கணக்கின் செலவு மீதியினை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 79,082,495 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நாளது வரை ஆக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், கணிப்பீட்டு சபை அறிக்கைகள், மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் கடன்பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,309,947 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,113,401 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வீத வரி மற்றும் ஏக்கர் வரி

--------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சபையினால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 23,043,830 இற்கான வீதவரி மற்றும் ரூபா 11,114 இற்கான ஏக்கர் வரி என்பவற்றை 1987 இன் 15 இலக்கம் கொண்ட பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.2 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சபையினால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 32,466 இற்கான வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் 1987 இன் 15 கொண்ட பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 832,060 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 23,244,122 இற்கான முத்திரைக் கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 கடை வாடகை

----------------------

போதல பொதுச் சந்தை 08 கடைகள் தொடர்பாக 2014 ஜனவரி 24 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) 2010 திசெம்பர் 27 திகதிய இலக்கம் 2010/01 கொண்ட தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் கடைகள் வாடகைக்கு கொடுக்கும் போது அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்த போதும், போதல பொது சந்தை கடைகளில் வாடகை உடன்படிக்கைகள் 1988 ஆண்டின் பின்னர் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் மாதாந்த வாடகைத் தொகை ஒவ்வொரு மாதமும் 15 திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் எனவும் அனைத்து கடைகளிலும் 04 மாதங்கள் முதல் 30 வரையான காலவீச்சில் ரூபா 424,081 இற்கான வாடகை மற்றும் ரூபா 46,697 இற்கான தண்டப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் வாடகைக்கு பெற்றுள்ள தரப்பினர் எக் காரணத்தினாலும் வாடகைக்குப் பெற்றுள்ள ஆதனத்தை கீழ் வாடகைக்கு கொடுக்கக் கூடாது. எனினும் 03 கடைகள் கீழ் வாடகைகக்கு வழங்கப்பட்டிருந்தன.

(iv) உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் வாடகைக்கு பெற்றுள்ளவர் எக் காரணத்தினாலும் சபையின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி வாடகைக்கு பெற்றுள்ள கடைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது எனினும் இலக்கம் 1,3,4,5,6,7 மற்றும் 8 ஆகிய கடைகளில் மற்றும் 2 ஆம் இலக்க கடை ஆகிய கடைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

(v) உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் கடைகளில் உட் பகுதியில் மாத்திரம் விற்பனை பொருட்கள் விற்பனை செய்வதற்காக வைக்கப்பட வேண்டும் எனினும் அனைத்து கடைகளில் வெளிப்புறங்களிலும் விற்பனை பொருட்கள் குவித்துக் காணப்பட்டன.

2.2.5 தொலைபேசி தொலைத் தொடர்பு டவர்களுக்கான கட்டணம்

--------------------------------------------------------------------------------------------

சபையினால் 2013 பெப்ரவரி 15 திகதி வெளியிடப்பட்டுள்ள இலக்கம் 1798 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பரிமாற்றல் டவர் ஒன்று நடத்துவதற்காக வருடாந்த பெறுமதியின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 டவர்களுக்காக ரூபா 9,000 வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டுத் மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டிருந்த 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தும் சட்டத்தின் பிரகாரம் 2012 ஆண்டின் போது உப தலைவர் மற்றும் 05 அங்கத்தவர்களினாலும் 2013 ஆண்டின் போது 08 அங்கத்தவர்களினாலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------

3.2.1 கீகியனகே வத்த ஓவிட காணி ஏல விற்பனை

-------------------------------------------------------------------------

காணி வரைவு இலக்கம் : 483/2011 இன் மூலம் 03 ஏக்கருக்கான 38.94 பர்சஸ் கொண்ட நாவின்ன கீகியனகேவத்த ஓவிட காணியை துண்டுகளாக்குவதற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு 2013 ஆகஸ்ட் 05 திகதி துண்டு பிரிக்கப்பட்டுள்ள வரைபினை அங்கீகரித்து அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கியிருக்கவில்லை.

ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த காணிகளில் இருந்து சபைக்கு வழங்கியிருந்த 02 காணித் துண்டுகள் தொடர்பாக 2014 பெப்ரவரி 28 திகதி மேற்கொள்ளப்பட்டுள்ள இடப் பரிசோதனையின் போது 01 ஆம் இலக்க காணித் துண்டு காணிக்கு உட்புகும் இடத்தில் காணப்படும் ஒடுக்கமனா காணித்துண்டெனவும் 26.13 பர்சஸ்களைக் கொண்ட 28 ஆம் இலக்க காணித்துண்டு தென்மேற்கு முனையில் அமைந்துள்ள நீர்ப்பாசன ஓடையின் நீர் சேமிக்கபடும் இடத்தின் எல்லையில் அமைந்துள்ள துண்டு ஒன்றெனவும் அவதானிக்கப்பட்டது.

3.2.2 மதிப்பளிக்கப்படாத காசோலைகள்

-----------------------------------------------------

2011 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா 20,339 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலைகளை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 செயற்படாத சொத்துக்கள்

------------------------------------------

2013 ஜுன் 05 திகதிய PCMD/PR/2013 கொண்ட ஜனாதிபதிச் செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனத்தினால் பயன்படுத்தப்படாமல் அழிவு நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அகற்றுவதற்காக வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. சபைக்குச் சொந்தமான 02 கைடிரக்டர்கள் மற்றும் பவுஸர் ஒன்று 05 வருடங்களுக்கு மிகையான காலம் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது என 2014 ஜனவரி 24 திகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இந்த பண்டங்கள் தொடர்பாக சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தனக்கு அறிவிக்குமாறு 2013 செப்டம்பர் 17 திகதி உள்ளூராட்சி ஆணையாளரினால் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்